**வலப்பனை பிரதேச சபை**

**நுவரெலியா மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 25 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 27 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து வலப்பனை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் வைப்பு மீதியாக முன்னைய ஆண்டின் பிணை வைப்பு மீதி ரூபா 135,058 வரை இருந்ததுடன் ஊழியர் பிணை பாஸ் புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 725,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,725,000 என ரூபா 1,000,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கணக்கு வைத்தமையால் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரித்தாக உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை ரூபா 81,365 உரிய செலவினக் குறியீட்டிற்கு வரவு வைக்காமல் கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு

வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டில் அச்செலவினம் அப்பெறுமதியினால் குறைத்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 20 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் பிரதேச சபை பலப்படுத்தும் கணக்கு ரூபா 668,887 ஆல் வரவு மற்றும் பொது வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வருமாறு பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அச்செலவுப் பதிவு மாத்திரம் கடன்கொடுத்தோர் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தமையால் கடன் கொடுத்தோர் மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கணக்கு வைத்தமையால் கணக்கு சமப்படுத்தும் முறை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ஏனைய வருமான மீதி ரூபா 4,542,737 ஆகவும் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,626,542 என ரூபா 916,195 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ஏனைய வருமான மீதி ரூபா 8,036,448 மற்றும் ஏனைய வருமான பதிவேட்டின் பிரகாரம் அம் மீதி ரூபா 7,782,448 ஆக இருந்ததால் ரூபா 254,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 24,530,918 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 10,206,080 தொகை ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 34,361,731 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 18,481,611 தொகை ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 27,712,522 தொகையான 12 கணக்கு விடயங்களை பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 571 | நிர்மாண வேலைக்கு அறவிடப்படுகின்ற 06 வைப்புக்களில் ரூபா 284,503 ஆன தொகையொன்று 02 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதிலும், வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பந்தி | சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற வரிதாக்கிய மற்றும் இறந்துள்ள 17 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 129,726 கடன் தொகை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (இ) 2016 சனவரி 14 ஆந் திகதிய 1950 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரம் | 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் முச்சக்கர வண்டியொன்றிலிருந்து ரூபா 150 ஆன மாதாந்த கட்டணம் அறவிடப்படுவதாக பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் வலப்பனே பிரதான அலுவலக அதிகாரப் பிரதேசத்திலும் நில்தாண்டாஹின்ன உப அலுவலக அதிகாரப் பிரதேசத்திலிருந்தும் முச்சக்கர வண்டிகளிலிருந்து அக்கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் | சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வியாபாரங்களுக்கு இடையே 19 வியாாரங்களுக்கு மாத்திரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங் களுக்கு இணங்க 1533/16 ஆம் இலக்க 2008 சனவரி 25 ஆந் திகதிய சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் விநியோகிக்கப் பட்ட அதிவிசேட வர்த்தமானி பத்திரம். | |
| (உ) | 1988 இன் மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை திருத்தப்பட வேண்டிய போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி ஆதனங்கள 2011 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 218 | பிரதேச சபையிடம் உள்ள காணி தொடர்பாக கணிப்பீடென்று செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,762,074 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 7,981,425 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவில் ரூபா 2,780,649 தொகை முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------------------

நிதி விளைவுகளில் ரூபா 2,780,649 ஆன முன்னேற்றத்திற்கு 02 வருமான விடயங்களில் அதிகரிப்பும் 02 செலவின விடயங்களில் அதிகரிபப்பும் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 66,657,118 மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 49,341,132 ஆக இருந்தமையால் நடைமுறை விகிதம் 1.35:1 ஆக இருந்தது.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வருமானங்களில் அறவீடுகள் மிகவும் பலவீனமான நிலைமையொன்று காணப்பட்டதுடன் ஆணடில் பட்டியலிடப்பட்ட ஏக்கர் வரி மற்றும் கடை வாடகை அறவீடுகளின் நிலைமையும் திருப்திகரமாக இருக்கவில்லை. நிலுவை பணத்தை அறவிடுவது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) (அ)மற்றும்(ஆ) பிரிவுகள் 159(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 32 முதல் 67 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வாடகை

சபையின் பொது வியாபார நிலையங்கள் அமைந்துள்ள 03 கடைகளில் குத்தகையாளர்களால் 03 மாதங்கள் முதல் 57 மாதங்கள் வரையான வீச்சில் ரூபா 460,260 ஆன வாடகை கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் கடைகள் யையேற்கப்பட்டோ அல்லது நிலுவை வாடகை அறவிடுதற்கு சட்டரீதியாக நடடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் கடைகளை சபைக்கு கையளிக்குமாறு குத்தகையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தமை மாத்திரம் அவதானிக்கப்பட்டது.

## 2.5 மிகை விதிப்புக்கள்

பிரதேச சபைச் சட்டத்தின் 172(3) ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 29,975 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

---------------------------------------------------------

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 26 ஆந் திகதிய 1/05/எஸ்ஏ - 2 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அந்த அமைச்சின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் 2017 சனவரி 06 ஆந் திகதிக்கு முன்னர் குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு கையேற்குமாறு அவ்வாறு கையேற்றல் தாமதம் தொடர்பாக செலுத்த வேண்டிய தண்டப்பணம் தொடர்பாக பொறுப்புக்கள் உரிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினால் பொறுப்பேற்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான 03 வாகனங்கள் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலைமையில் இல்லாத 06 வாகனங்களும் உழவு இயந்திர டேலர் ஒன்றும் 01 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பாதுகாப்பற்ற வகையில் உருக்குலைந்த நிலைமையில் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் புதுப்பிக்கக்கூடிய வாகனங்களை இனங்கண்டு திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடர் 2016 யூன் 26 ஆந் திகதி செயலற்று இருந்ததுடன் அது தனியார் நிறுவனமொன்றின் மூலம் புதுப்பிக்கப்பட்டிருந்தது. தனியார் நிறுவனத்தினால் வாகனத்தை திருத்துவதற்காக ரூபா 811,578 ஆன மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் உற்பத்தியாளர் பரிந்துரைக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் சேவைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உராய்வு நீக்கிகள் பயன்படுத்தாமை போன்றவை காரணமாக இயந்திரம் செயலற்று போவதற்கு காரணமென அந்நிறுவனம் தெரிவித்திருந்தது.

1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.13 ஆம் பிரிவின் பிரகாரம் திருத்தங்களுக்காக பொறியியலாளரின் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் திருத்த வேலைகளின்

பின்னரும் பொறியியலாளரின் அல்லது ஏனைய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமல் பட்டியலில் குறிப்பிடப்பட்ட தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.3 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

---

பின்வரும் உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது பொருத்தமான பிரகாரம் கையகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற வகையில் அலுவலக வளவில் வைக்கப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| மின்பிறப்பாக்கி இயந்திரம் | - | 2007 ஆம் ஆண்டின் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. |
| பாரியளவு கொங்கிறீட் கலவை இயந்திரம் | - | கிடைத்த திகதி அல்லது வேறு தகவல்கள் வெளிப்படுத்தப்படா திருந்ததுடன் செயற்படக்கூடிய நிலையிலுள்ளது. |
| கொம்போஸ்ட் அரைக்கும் இயந்திரம் (கழிவு அரைக்கும் இயந்திரம்) | | தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| அச்சுக்கல் உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிரீட் கலவை இயந்திரங்கள் 02 | | செயற்படக்கூடிய நிலையிலுள்ளது. |

**3.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

---

நில்தண்டாஹின்ன கழிவுப்பொருள் மீள்சுழற்சி நிலையத்தை பரிசோதித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறையான கழிவுப்பொருள் முகாமை செய்யப்படாமல் பொலித்தீன் உட்பட உக்காத கழிவுகள் நிலைய வளவில் இடப்பட்டிருந்தன.

(ஆ) பிரதான பாதையிலிருந்து கழிவுப்பொருள் நிலையம் வரை வீதியின் இரண்டு பக்கங்களிலும் பொலித்தின் என்பன இடப்பட்டிருந்தன.

(இ) உக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி கொம்போஸ்ட் பசளை உற்பத்தி முறையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் 09 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையும் 05 செலவு விடயங்களில் 10 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | சபைக்கு பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்யாமை மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளை தீர்வு செய்யாமை. |
| (இ) கணக்கீடு | கணக்காண்டிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை. |